4235

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(மாதவெளியீடு.)

ர் 6 | விஷு ஹூ ஆனி மீ 1வ
ஜூன்--1941

THE MADURA TAMIL SANGAM

பொருளடக்கம்

திருப்புகழ் சுவாமிமலை (கறைபடு)	49
பதவுரை	50
பொழிப்புரை	51
விரிவுரை	52
கருத்துரை	54
காமியத் தழுந்தி	
பதவுரை	54
பொழிப்புரை விரிவுரை	55
கந்தரலங்காரம் (வேலே)	58
சிவானந்தலஹரீ	60
கந்தர் திருவிளையாடல்	61
கற்பு	65
குருபக்தி	71
கந்தரநுபூதி	109

திருப்புகழ்த் தொண்டன்:---கிருபானந்தவாரி.

திருப்புகழமிர்தம் ஆபீஸ்
108, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

சந்தா ரூ 1 - 4 - 0. தனிப்பிரதி அ

உ

ஓம் குஹாய நம :

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதார வைபவம்.

மெய்யன்பர்களே!

மூவர் முதல்வனாகிய முருகவேளது முழுமுதற் கருணையை முழுவதும் பெற்று, பதினாறாயிரம் தமிழ் வேதங்களாகிய திருப்புகழைப் பாடி உலகிற்கு உதவிய பரம குருநாதராகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதரித்த திருநாளைக் கொண்டாடுவது முருகனருளைப் பெறுவதற்குரிய சிறந்த வழியாம்.

சுவாமிகளது அவதார நாள் விஷு ௵ ஆனி மீ 25 உ (8-7-41) செவ்வாய்க் கிழமையாகும். அன்று அன்பர்களனைவரும் அருணகிரியாரது திருவுருவத்தை வைத்து அறுமுகனாரையும் அருணகிரியாரையும் வழிபட்டு, கூடுமானவரை ஏழைகட்கு அன்னம் அளித்து, விரதமிருக்கின் எல்லா நலன்களையும் இனிது பெற்று இன்புறுவர்.

காங்கேய நல்லூர், வயலூர், மதுரை, திருநெல்வேலி, மோகனூர், 5-1 வடமலைமேஸ்திரி தெரு (சென்னை), கலசபாக்கம் முதலிய இடங்களிலுள்ள திருப்புகழ் சபையார்களால் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் படும்.

ஆதிகாலத்து

ஒரிஜினல் நெய் மிட்டாய்க் கடை

No. 72 கீழாவணி மூல வீதி,

மதுரை.

N. B. எங்கள் O. M. K. நல்லெண்ணெயை உபயோகியுங்கள்.

உ

ஓம் குஹாய நம:

சென்னை, ஷண்முகஞானபுரம் (கூவப்பேட்டை)

ஷண்முககோட்டம், இராஜகோபுர

மகா கும்பாபிஷேகம்

நினைத்த காரியம் அநுகூலமேபுரி நெடுஞ்சுடர் வடிவேலண்ணல் திருவருளால், இராஜகோபுரத் திருப்பணி இனிது முடிவு பெற்று, அடியிற் கண்ட நிகழ்ச்சிமுறைப்படி மிகச் சீரிய முறையில் கும்பாபிஷேகம் நிகழும். அன்பர்கள் அனைவரும் வந்து, கண்டு, கேட்டு இன்புற வேண்டுகின்றோம்.

பொருளுதவிசெய்ய விரும்பும் மெய்யன்பர்கள் நமது திருப்புகழமிர்தம் விலாசத்திற்கு அனுப்பி சிவபுண்ணியத்தில் பங்கெடுத்துக் கொள்வார்களாக.

நிகழ்ச்சி முறை.

1941 ஜூன்	விஷு ஆனி		
30	17	திங்கள்	விநாயகர் பூஜை, பிரவேசபலி முதலியன, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம்.
ஜூலை 1	18	செவ்வாய்	பள்ளியறை ஸ்வாமிக்கு ரத்தின நியாசம், நயனோன்மீலனம், ஜலாதிவாசம் முதலியன.
2	19	புதன்	கலசஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகாரம்பம்.
3	20	வியாழன்	யாகபூஜை.
4	21	வெள்ளி	காலை 9-மணிக்கு மேல்

மகா கும்பாபிஷேகம்.

10-மணிக்கு மகா அபிஷேகம் மாலை திருக்கல்யாண உற்சவம், திருவீதி பவனி முதலியன நடைபெறும்.

ஷை ஐந்து நாட்களிலும் காலை மாலைகளில் ஸ்ரீ லஸ்ரீ காசிவாசி ஈசான சிவாச்சாரியரவர்கள், பிரமஸ்ரீ திருப்பழமணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், ராவபகதூர் திரு. வ. சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள், குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்கள், இன்னும் பல பெரியார்கள் உபன்னியாசங்களும், திரு. சித்தூர் சுப்ரமணிய பிள்ளை, திரு. மாரியப்பசாமி அவர்கள் சங்கீதக் கச்சேரிகளும், பெரம்பலூர் அங்கப்பபிள்ளை அவர்கள் மேளக்கச்சேரி முதலிய வைபவங்கள் நடைபெறும்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி

அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்

உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்

(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)

நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,

பட்டு-சேலை தினுசுகள்

சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்,

கே. எஸ். காளத்தி முதலியார்,

ஆதிநாராயண முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.

ஸோல்ஏஜண்ட்ஸ்; யுனைடெட்கன்ஸர்ன் 54, பந்தர்தெரு மதராஸ்

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 6. Vol 6.
விஷு ஹூ ஆனி மீ 1உ
ஜூன் 1941
இதழ் 3 No. 3

திருப்புகழ்.

திருவேரகம் (சுவாமிமலை)

கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து வாயுவைக்
கருமவச னங்க ளால்மறித் தனலூதிக்

கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்
கலகமிடு மஞ்சும் வேரறச் செயல்மாளக்

குறைவறநி றைந்த மோனநிற்
குணமதுபொ ருந்தி வீடுறக்
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா

குமரசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ

சிறைதளைவி ளங்கு பேர்முடிப்
புயலுடன டங்க வேபிழைத்
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்

திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்
பிறைமவுலி மைந்த கோவெனப்
பிரமனைமு னிந்து காவலிட்
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்
பெருகுமத கும்ப லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த சேவகப் பெருமாளே.

பதவுரை.

திகிரி கொள் - சக்கிராயுதத்தை யுடையவரும், அநந்த சூடிகை - ஆதிசேடன் முடியில் விளங்குபவருமாகிய, திருமாலும் - நாராயணமூர்த்தியும், பிறை மவுலி மைந்த - சந்திரனைச் சடையில் தரித்த சிவகுமாரரே! கோ என - முறையோ என்று முறையிட, பிரமனை முனிந்து - (பிரணவப் பொருளை யறியாது விழித்த) நான்முகனைக் கோபித்து, காவல் இட்டு - குட்டி நெட்டிச் சிறையிலிட்டும், சிறைதனை விளங்கு - சிறைச்சாலையில் தளைப்பட்டுத் துன்புற்று விளங்கிக் கொண்டிருந்த, பேர் முடி புயல் உடன் - மேகவாகனனாகிய பெரிய இந்திரனுடனே, இமையவர் அடங்கவே - தேவர்கள் எல்லோரும், பிழைத்து - சிறையினின்று நீங்கி உய்ந்து, தங்கள் ஊர்புக - தங்களுடைய பொன்னகரத்திலே புகுந்து இன்புறுமாறு, சமர் ஆடி - அசுரர்களுடன் போர்புரிந்து, திமிரமிகு சிந்து வாய்விட - இருள் நிறைந்த கடல் ஓலமிட்டலறவும், சிகரிகளும் வெந்து நீறு எழ - குலமலைகளும் தீய்ந்து பொடியாகவும், மண்டு சூரனை - நெருங்கி வந்த சூரபன்மனை, ஒரு நொடியில் - ஒரு கண்பொழுதுக்குள், பொருது ஏறி - போர்புரிந்து வெற்றி பெற்று, பெருகுமத கும்பலாளித கரி என - ஊற்றெடுக்கின்ற மதம் பொருந்திய மத்தகத்தினையுடைய அழகிய யானை என்று சொல்லும்படி, ப்ரசண்ட வாரண பிடி தனை - வலிமையுடைய ஐராவதத்தால் வளர்க்கப்பட்ட தெய்வயானை யம்மையை, மணந்த சேவக - திருமணஞ் செய்து கொண்ட வீரரே! பெருமாளே - பெருமையின் மிக்கவரே! கறைபடும் இரத்தம் நிறைந்த, உடம்பு இராது என கருதுதல் ஒழிந்து - உடம்பு நிலைத்திராது அழிந்துபோம் என்று எண்ணுவதை விட்டு, வாயுவை கரும வசனங்களால் மறுத்து - (உடல் நெடுநாளிருக்கும் பொருட்டு) பிராணவாயுவை ஆகருஷண ஸ்தம்பனாதி மந்திரங்களால் கும்பித்து, அனல் ஊதி - அவ்

வாயுவை உடம்பெங்கும் பரவும்படிச் செய்து அதனல் மூலாக்கினியை எழுப்பி, கவலைபடுகின்ற - சித்தி யுடையவேண்டு மென்று நெஞ்சங் கவல்கின்ற, யோககற்பனை மருவு சிந்தை போய் விட - அடயோகம் முதலியவைகளின் கட்டளைகள் நிரம்பிய மனமானது நீங்கவும், கலகம் இடும் அஞ்சும் வேர் அற - ஒரு வழிப்பட வொட்டாமல் கலகம் புரிகின்ற ஐம்புலன்களின் வழிசெல்லும் சப்தம் ஸ்பரிசம் ருபம் ரசம் கந்தம் என்னும் தன்மாத்திரைகளான ஆசைகள் ஐந்தும் வேருடன் அற்றுப் போகவும், செயல் மாள - என் செயல் என்பது ஒழிந்து போகவும், குறைவுஅற நிறைந்த மோன - குறைவில்லாமல் பரிபூரணமாக வுள்ள மௌனநிலையை யடைந்து, நிற்குணம் அது பொருந்தி - முக்குணங்களை யொழித்து அருட்குணங்களைப் பொருந்தப் பெற்று, வீடு உற - முத்தியை யடையவும், குருமலை விளங்கு - சுவாமிமலையில் எழுந்தருளி யிருக்கும், ஞான சற்குரு நாதா - உத்தமமான ஞானகுரு மூர்த்தியே! குமர - குமாரக் கடவுளே! சரண் என்று - தேவரீர் திருவடியே அடியேனுக்கு அடைக்கலம் என்று கூறி, கூதள புதுமலர் சொரிந்து - புதிய கூதளம் என்ற மலர்களைத் திருவடியில் அருச்சித்து, கோமள - இளமையான, யுகளபத புண்டரீகம் உற்று - இரண்டு திருவடித் தாமரைகளையும் அடைந்து, உணர்வேனே - அத்திருவடி இன்பத்தினை அறிந்து உய்வு பெறுவேனே?

பொழிப்புரை.

சக்ராயுதத்தை யுடையவரும், ஆதிசேடன் முடியில் விளங்குபவரும் ஆகிய விஷ்ணுமூர்த்தி (தன் மகன் தலையில் குட்டுவதைக் கண்டு) "சந்திர சேகரரது திருக்குமாரரே! முறையோ" வென்று ஓலமிட, பிரணவத்தின் பொருளுரைக்காது விழித்த பிரமதேவனைக் குட்டிச் சினந்து, சிறையிலடைத்து, சிறையிலிருந்து துன்புறுகின்ற மேகவாகனனுகிய இந்திரன் முதலிய இமையவர்கள் சிறையினின்று நீங்கி தங்கள் பொன்னுலகஞ் சேர்ந்து இன்புறவும், இருள் நிறைந்த கடல் ஓலிட்டலறவும், குலமலைகள் வெந்து நீருகவும், நெருங்கி வந்த சூரனை ஒரு நொடிப்பொழுதில் போர்புரிந்து வென்று, மதம் பொழிகின்ற மத்தகத்தை யுடைய அழகிய யானை யென்று கூறுமாறு, மிகுந்த வலிமை யுடைய ஐராவதத்தால் வளர்க்கப்பட்ட தெய்வகுஞ்சரி யம்மையை மணந்து கொண்ட வீரரே! பெருமித முடையவரே! இரத்தம் நிறைந்த உடம்பு, நிலைத்

திராது என்று எண்ணுவதைத் தவிர்த்து, நிலைத்திருக்குமென்று எண்ணி, பிராணவாயுவை ஆகருஷண ஸ்தம்பனாதி மந்திரங்களால் கும்பித்து, அப்பிராணவாயுவால் குண்டலி சத்தியை எழுப்பி, "சித்தி யடையவேண்டுமே" என்று கவலைபடுகின்ற ஹடயோகம் முதலியவைகளின் கட்டளைகளை நினைக்கின்ற சிந்தனை தொலையவும், (ஒரு முகப்பட்டுத் தியானிக்க வொட்டாமல்) கலகம் புரிகின்ற ஐவாய்வழி செல்லும் சத்தாதி ஐந்தும் அடியோடு அழியவும், "என் செயல்" என்பது நீங்கவும், குறைவில்லாத நிறைந்த மௌனத்தை யடைந்தும் சத்துவ ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்கள் நீங்கி அருட்குணம் பெற்று முத்தியை யடையவும், "சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள ஞான சற்குரு நாதரே! குமாரக் கடவுளே!" என்று துதித்து, புதிய கூதள மலர்களால் அருச்சித்து, தேவரீருடைய இளமை பொருந்திய இரண்டு திருவடித் தாமரைகளை யடைந்து, அத்திருவடியின்பத்தை உணர்ந்து உய்வேனோ?

விரிவுரை.

கறைபடுமுடம்பு:—

கறை - என்பதற்கு குற்றம் என்னும் பொருள் கொள்ளலாம். உடல் நீர் மேற்குமிழிக்கு நிகரானது. எத்துணைநாளிருப்பினும் ஒரு நாளைக்கு அழிந்து ஒழியும்.

குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

—திருவள்ளுவர்

நிலையற்ற உடம்பை நிலைப்படுத்த வேண்டுமென்று எண்ணி ஹடயோகஞ் செய்து துன்புறுவதை சுவாமிகள் இத்திருப்பாடலால் கண்டிக்கின்றனர்.

"அனித்த மான வூனாரு மிருப்பதாகவே நாசி
அடைத்து வாயு வோடாத வகைசாதித்து"

—திருப்புகழ்.

கருமவசனங்கள்:—

ஆகருஷண ஸ்தம்பனாதி மந்திரங்கள்,

அனலூதி:—

பிராணவாயுவினால் மூலக்கனலை மூட்டி எழுப்புதல்.

"நாளுமதிவேக கால்கொண்டு தீமண்ட"
—திருப்புகழ்.

"மூலாதாரத்தின் மூண்டெழுகனலை
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே"
—விநாயகரகவல்

கவலைபடுகின்ற............போய்விட:—

யோகநூல்களைப் படித்து, அதன்படி ரேசக பூரக கும்பகம் முதலிய சாதனங்களைச் செய்து சித்தி யடையும் பொருட்டு கவலைப்பட்டு உள்ளம் உடைபடவேண்டா; முருகவேள் முளரி யந்தாளில் கருத்தைப் பதித்தால், முத்தியுலகடைதல் எளிது.

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசி வைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிசரே.
—கந்தரலங்காரம்.

கலகமிடும் அஞ்சும் வேரற:—

ஒன்றுடன் ஒன்று கூடாத ஐம்புலன்களின் வழியே செல்லும் ஐவகையான ஆசைகள் வேருடன் அழிதல் வேண்டும்.

* * * "ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய்விழி நாசி யொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே"
—அநுபூதி.

சிறைதனை ....ஊர்புக:—

இந்திராதி இமையவர்கள் சிறையை விடுவித்து விண்குடியேற்றினர். முருகப் பெருமான், பிரமனைச் சிறையிட்டும், தேவர்களைச் சிறைநீக்கினார் என்று அழகுபடக் கூறுகின்றார். கந்தக் கடவுள் கமலாசனனை அவன் தந்தையாகிய திருமால் பார்த்துக் கொண்டிருக்கும்போதே குட்டி, அத்திருமால் ஓலென்று முறையிடச் சிறையிடுவித்தனர்.

* * * "உவரியவண

கட்டினேன் பார்த்திருக்கக் காதலவன் றன்றலையிற்

குட்டினேன் ருனே குரு"

நிற்க; சூரனைக் கொன்ருர் என்பது ஆணவமலத்தை யழித்தார் என்றும், கடலை வற்றச் செய்தார் என்பது, பிறவியாகிய பெருங்கடலை யழித்தார் என்றும், மலைகளைப் பொடிபடுத்தினர் என்பது அகங்காரமாகிய மலைகளைத் துகள் செய்தார் என்றும், தெய்வயானையை மணந்தார் என்பது கிரியாசக்தியுடன் கூடியருள் புரிகின்ருர் என்றும் அகமுகத்தில் பொருள்படும்.

கருத்துரை.

தேவர் சிறைவிடுத்து, தெய்வயானையை மணந்த தேவ தேவரே! ஹடயோக முதலியவைகளைச் செய்து துன்புருமல் தேவரீர் திருவடியைச் சிந்தித்து இன்புற அருள்புரிவீர்.

திருப்புகழ்

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

பதவுரை,

தூமம் மெய்க்கு அணிந்த சுகலீலா - நறும்புகை திருமேனியிற் படியும் படிச் செய்து உயிர்கள் இன்புறும் பொருட்டு திருவிளையாடல் புரிபவரே, சூரனை கடிந்த கதிர் வேலா - சூரபன்மனைத் தண்டித்த ஒளிவீசும் வேற்படையை யுடையவரே! ஏம வெற்பு உயர்ந்த மயில் வீரா - பொன் மலையாகிய மேருகிரியைப் போல உயர்ந்துள்ள மயில்வாகனத்தில் எழுந்தருளி

வரும் வீரரே! ஏரகத்து அமர்ந்த பெருமாளே - சுவாமிமலையில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் பெருமையின் மிக்கவரே! காமியத்து அழுந்தி இளையாதே - பயன் கருதிச் செய்யும் கிரியை பக்தி இவைகளில் மனம் அழுந்தி இளைக்காமலும், காலர் கை படிந்து மடியாதே - இயமதூதர்கள் கையிற் சிக்குண்டு அவமே இறந்து படாமலும், ஓம் எழுத்தில் அன்பு மிக ஊறி - ஓம் என்ற பிரணவ மந்திரத்தில் மிகுந்த அன்பைப் பெருக்கி, ஓவியத்தில் அந்தம் அருள்வாயே - சித்திரம்போல் அசைவற்றிருக்கும் முடிவை அருள் புரிவீர்.

பொழிப்புரை.

திருமேனியில் நறும்புகை படியும்படிச் செய்து உயிர்கள் இன்புறும் பொருட்டு, திருவருளாடல் புரிபவரே! சூரமன்மனைத் தண்டித்து அடக்கிய ஒளிவீசும் வேற்படையை யுடையவரே! மேருகிரிபோல் உயர்ந்து பொற்பிரகாசமாகிய மயில்மீது ஊர்ந்து வருகின்ற வீரரே! திருவேரகமென்கின்ற சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள பெருமிதமுடையவரே! பலன் கருதிச் செய்யும் கிரியை முதலியவற்றில் மனம் அழுந்தி இளைக்காமலும், காலன் கையிற் சிக்குண்டு வீணே மடிந்து போகாமலும், பிரணவ மந்திரத்தில் மிகுந்த அன்புபூண்டு, அம்மந்திரத்தை மானசீகமாக நினைந்து, ஓவியம்போல் அசைவற்று இருக்கும் முடிந்த முடிவை யருள்புரிவீர்.

விரிவுரை.

காமியத்தழுந்தி இளையாதே:—

காமியம் - பயன் கருதிச் செய்வது; இறைவழிபாடு, இறையன்பு, முதலியவற்றைப் பயன் கருதிச் செய்வது உயர்ந்த லட்சியமாகாது. செல்வம் வேண்டுமென்றும், பதவி வேண்டுமென்றும், உத்யோகம் வேண்டுமென்றும், சந்ததி வேண்டுமென்றும், நோய் விலக வேண்டுமென்றும், இப்படி பலர் பலவகையான பயன் கருதி கோயிலுக்குப்போய் கும்பிடுகின்றார்கள். எந்த எந்தப் பயனைக் கருதுகின்றார்களோ அந்தந்தப் பயனை இறைவன் தருகின்றனன்; ஆனால், அந்தப் பயனுடன் நின்று

விடுகின்றது. இறைவன் திருவருளை நாடி வழிபட்டால், அத் திருவருளால் எல்லா நலங்களும் எய்தும்; இம்மையிலும் மறுமையிலும் இனபுற்று இனிப்பிறவா நலமும் உண்டாகும்.

ஒரு சிறந்த மாமரத்தைப் பயிர் செய்வது உயர்ந்த மாங்கனியைப் பெறும் பொருட்டேயன்றோ? பழத்தை விரும்பியன்றோ அதனைப் பயிர் செய்தல் வேண்டும். பல்குச்சி வேண்டுமென்றும், இலை வேண்டுமென்றும், நிழல் வேண்டுமென்றும், சருகு வேண்டுமென்றும் மாமரத்தை வளர்ப்பது அறிவுடைமையாகுமோ? பழம் வேண்டுமென்ற பெருநோக்கத்தால் பயிர் செயின், ஏனைய சிறுபடன்கள் தானே கிடைக்குமன்றோ? ஆதலால் பெருமானை யாதொரு பயனையும் வேண்டாமல், நிஷ்காம்யமாக வழிபாடு செய்ய வேண்டும்.

காலர்கைப்படிந்து மடியாதே:—

நிஷ்காம்ய பக்தி செய்வார் காலர் வசப்படமாட்டார்.

ஓமெழுத்திலன்பு மிகவூறி:—

"ஓம்" என்ற எழுத்தே சூக்கும சடக்கரமாம். ஆறெழுத்தும் அதில் அடங்கியுள்ளது. "ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே" என்ற திருவாக்கால் தெளிக.

"ஓமென்னும் பிரணவாக்ஷரமே ஆதியிலுபதேசிக்கப் பட்டது; அதுவே தியானம். அதுவே தியானிக்கற்பாலது" என்னும் பொருள்பட வரும் வேத வசனத்தையும் உன்னுக.

"ஓமித்யேததக்ஷரமாதௌ ப்ரயுக்தம் த்யாநம் த்யாயிதவ்யம்"
—அதர்வசிகோபநிடதம்.

இப்பிரணவ மந்திரம் ஒரு முறை உச்சரித்த மாத்திரத்தாலேயே உயர்ந்த கதியில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது.

"ஸக்ருதுச்சரிதமாத்ர ஊர்த்வமுந்நாமயதீத்யோங்கார:"
—அதர்வசிகை.

"ஓமித்யேததாத்ம ஓமித்யேததக்ஷரம்"
—சாமவேத மைத்ராயண்யுபநிடதம்.

(பொருள்:— ஓ மென்பது அந்தப் பரமாத்மா; இந்தப் பிரணவம் அக்ஷரப் பிரமம்)

"ஓமித் ஏகாக்ஷரம் ப்ரஹ்ம ஓமித்யேதந் நரேசயேத்"

அதர்வசிகை.

(பொருள்:— பிரணவ மென்பது ஏகாட்சரப் பிரமம்; பிரணவத்தை என்றுந் தள்ளக் கூடாது.)

"ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணிச யத்வதந்தி
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தேபதம் ஸங்க்ரஹேண ப்ரவீமி
ஓமித்யேதத்"

—கடோபநிஷத்

[பொருள்:— எதைப்பற்றி சர்வ வேதங்களும் கூறுகின்றனவோ, எதைச் சர்வ தபசுகளுஞ் சொல்லுகின்றனவோ, எதை இச்சித்து பிரமசரியத்தை யனுஷ்டிக்கின்றார்களோ, அதை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். அதுதான் "ஓம்" (என்ற அக்ஷரம்]

இன்னும் இப்பிரணவ மந்திரத்தின் பெருமையை விரிக்கிற் பெருகும். இப்பிரணவ மந்திரத்தை மிகுந்த அன்பு பூண்டு, தியானித்து, ஓவியம்போல் அசைவற்று விளங்கும் தன்மையே முடிவு என்பது இத்திருப்புகழால் போதருகின்றது.

கருத்துரை.

இன்பத்தை விளைவிப்பவரே! வேலாயுதரே! மயில்வீரரே! திருவேரகரே! காலர்கைப்படாமல், நிஷ்காம்ய பக்தியுடன் பிரணவ மந்திரத்தைத் தியானித்து அசைவற்றிருக்க அருள்புரிவீர்.

உ
ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

(28) வேலே விளங்குகை யான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.

பதவுரை.

வேலே - வேலாயுதமே, விளங்கும் கையான் - விளங்கிக் கொண்டிருக்கும் திருக்கரத்தை யுடைய குமாரக் கடவுளின், செய்ய தாளினில் - சிவந்த திருவடியில், வீழ்ந்து இறைஞ்சி-விழுந்து வணங்கி, மாலே கொள-அன்பையே கொண்டால், இங்ஙன் - இவ்வுலகத்திலேயே, காண்பது அல்லால் - காண்பது அல்லாமல், மனம் வாக்கு செயலாலே -மனம் வாக்கு காயம் என்ற முக்கரணங்களால், அடைதற்கு அரிது ஆய் - பெறுதற்கு அரியதாகி, அரு உரு ஆகி - அருவமும் உருவமும் ஆகி, ஒன்றுபோலே இருக்கும் - எப்போதும் ஒரு தன்மையாகவே மாறுபாடின்றித் திகழும், பொருளை - பொருளை, புகல்வது எவ்வாறு - எவ்வாறு எடுத்துச் சொல்வது? (ஏ—அசை)

விரிவுரை.

வேலே விளங்கு கையான்:—

ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. படைக்கல நாயகமாகிய வேற்படை விளங்குகின்ற திருக்கரத்தை யுடையவர் என்பதனால் ஞானாகரன் என்பது குறிப்பு.

மாலேகொள விங்ஙன் காண்பதல்லால்:—

ஓலமறைகளறைகின்ற ஒருவனும் மறைகளுங் கடந்தோர் தலைவனும் ஆகிய முருகக் கடவுளை அன்பு நெறியினாலேயே எளிதில் அடையலாம்; அன்பின்றி, வெற்றுக் கிரியைகளாலும் திரிகரணங்களால் செய்யும் தொழில்களாலும் அடைய முடியாது.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி யகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியினை யெய்த வொண்ணாதே —திருமந்திரம்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவு நீருங் கண்டு
நக்கு நிற்ப ரவர் தம்மை நாணியே —அப்பர்.

மனவாக்கு செயலாலே அடைதற்கரிதாய்:—

"அருவு மாகுவன், உருவமு மாகுவன், அருவும் உருவு மற்றதோர் தன்மையமாகுவன்" என்ற கந்தபுராண வசனப்படி, மனுதீதனாகியுள்ள குமாரக் கடவுளை மனத்தால் நினைக்கவும், வாக்கால் பேசவும் காயத்தால் அணுகவும் முடியாது. கரணங் கடந்த கடவுள்.

"வாய்விட்டுப் பேசொண்ணாதது" —திருப்புகழ்.

ஒன்றுபோலே இருக்கும் பொருள்:—

இறைவன் என்றும் ஒரு படித்தாயிருக்கின்றவன். போக்கும் வரவும், வளர்வும் தேய்வும், இறப்பும் பிறப்பும், விருப்பும் வெறுப்பும், இன்பமும் துன்பமுமின்றியுள்ள இயற்கைநிலை யுடையவன்.

எவ்வாறு புகல்வதுவே:—

இத்தகைய இறைவனது நிலையை - அன்புநெறி சென்று காண்பதேயல்லாமல் வாய்விட்டு எவ்வாறு கூறுவது? என்று வியக்கின்றனர்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஒரூர னல்லன் ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே
—அப்பர்.

"அவ்வாறறிவா ரறிகின்றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே" —அநுபூதி

கருத்துரை.

வேலாயுதக் கடவுளை வணங்கி அன்பு செய்தாலன்றி காரணங்கடந்த பொருளைக் காண முடியாது.

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

(75) கல்யாணிநம் ஸரஸசித்ரகதிம் ஸவேகம்
ஸர்வேங்கிதஜ்ஞமநகம் த்ருவலக்ஷணாட்யம்।
சேதஸ்துரங்கமதிருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்தஜகதாம் வ்ருஷபாதிருட॥

பதவுரை.

வ்ருஷபாதிருட — விடையின்மீது எழுந்தருளி வருபவரே!
ஸமஸ்த ஜகதாம் — எல்லா உலகங்களுக்கும்
நேத: — நாயகனே!
ஸ்மராரே — மன்மதனுக்குப் பகைவரே!
கல்யாணிநம் — மங்களகரமான தன்மையை யுடையதாயும்,
ஸரஸ சித்ரகதிம் — ஆசையோடு கூடிய விசித்ரமான கமனத்தை(நடை)யுடையதாயும்,
ஸவேகம் — வேகத்துடன் கூடியதாயும்
ஸர்வேங்கிதஜ்ஞம் — எல்லோர்களுடைய முகக்குறி முதலிய குறிகளை அறிகிறதாயும்
அநகம் — குற்றமற்றதாயும்
த்ருவலக்ஷணாட்யம் — சுழி முதலிய நிலையான இலக்கணங்களினால் நிறைந்ததாயுமுள்ள
சேதஸ் துரங்கம் — மனமாகின்ற குதிரையை
அதிருஹ்ய — ஏறிக்கொண்டு
சர — உலாவுவீர்.

பொழிப்புரை.

இடபவாகனரே! சகல கல்யாண குணங்களை யுடையதும், விசித்திரமான நடையை யுடையதும், அதிவேகத்தை யுடையதும், குறிப்புணர்வதில் வல்லதும், குற்றமற்றதும், சிறந்த இலக்கணங்களை யுடையதுமான அடியேனுடைய மனம் என்னுங் குதிரையின் மேலேறி உலாவுவீராக,

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(40-வது பக்கத் தொடர்ச்சி)

சூரபன்மன் குமாரக் கடவுளோடு தானேபோய் போர் செய்ய எண்ணி, ஒற்றர்களை யனுப்பி 1008 அண்டங்களிலுமுள்ள அசுரப் படைகளைத் சருவித்தான். அச்சேனைகள் உலகங்களெல்லாம் நடுங்க வந்து கூடின. விண்ணிலும் பண்ணிலுமிடமின்றி பிரமலோகம் விஷ்ணுலோகம் முதலிய உலகங்களிலெல்லாம் நிறைந்தன. அக்கினியும் யமனும் நடுங்கினார்கள். கதிரவன் மறைந்தான். பூதூளியால் சடல் வற்றியது. தேவர்கள் நடுங்கினார்கள். அது கண்ட சூரபன்மன் நீராடி உணவருந்தி நீறணிந்து நறுமணம் பூசிக்கொண்டு போர்க்கோலம் கொண்டு முன் யாமத்தில் தோன்றிய பெரிய தேரின்மீது ஏறிப் புறபபட்டான். சிவப்படைக்கலம் முதலியவைகள் நிறைந்த ஆயிரகோடி தேவர்களும், சிங்கவாகனமும் இந்திரஞாலத்தேரும் சூழ்ந்து வந்தன. பேரிகைகள் முழங்கின. எண்ணில்லாத சேனைகளுடன் போர்க்களங் குறுகினான். இமையவர் இரத்தக் கண்ணீர் வடிய அரற்றினார்கள்; இந்திரன் வருந்தினான்; நான்முகனும் நாரணனும் மனம் விம்மினார்கள். வீரரும பூசரும் வெய்துயிர்த்தார்கள்.

அப்பொழுது மாலும் அயனும் மகபதியு முருகவேளிடம் வந்து வணங்கி சூரன் வருகையைத் தெரிவித்தார்கள். பெருமான் கடைக்கணிக்க வாயுதேவன் மனவேகத்தேரைத் திருமுன்னிருத்த, கந்தவேள் போர்க்கோலம் புனைந்து திருத்தேர் மேலூர்ந்து புறப்பட்டார். புத்சேளிர் பூமழை பொழிந்தனர். பூதர்கள் அவுணசேனையின் பெருக்கத்தைச் கண்டு அஞ்சி, இவ்வாறு கூறுவார்கள். ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அவுணசேனைகள் அனைத்தும் இன்று வந்தன: இவர்கள்

வரத்தினிற் பெரியர் மாய வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போர் ஊக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச் செய்கையிற் பெரியர் தாங்கும்
கரத்தினிற் பெரியர் யாருங் காலனிற் பெரியரம்மா.

கடல்களைப் பருகுவர்; வடவைத் தீயினுங் கொடியார்; மேருகிரியைப் பந்தாடுவர்; இவர்கள் முன் சண்டமாருதத்தின் முன் பஞ்சுபோல் நாம் அழிவோம். ஓடி ஒளிவதற்கு இடமுமில்லை. எங்கும் அசுரர்களாயிருக்கின்றதனால் ஓடவும் இடமில்லை. போர் புரிந்து அழிவது உறுதி" என்று எண்ணிப் போர் புரியத் தொடங்கினார்கள்.

இந்திரன் நடுநடுங்கி திருமாலை நோக்கி, "அறுமுகக் கடவுள் மேல் 1008 அண்டங்களிலுமுள்ள அசுரசேனைகளெல்லாம் அமர் செய்ய வந்தன. இவைகளோடு போர் செய்து வெல்ல ஊழிகாலஞ் செல்லும் என்றால் சூரபன்மன் இறப்பது எங்ஙனம்? நங்கள் சுகப்படுங்காலம் என்று?" என்று வினவினான். விட்டுணுமூர்த்தி, "இந்திரனே!

காலமாய் காலமின்றி கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்க ளின்றி
ஞாலமாய் ஞால மின்றி யநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாயிருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.

முன்னர் மேருமலையில் முருகவேள் மூவருந் தேவரும் உயிர்களும் தன்பாற் காட்டி ஒரு வடிவங் கொண்டதை நீ மறந்தனை போலும்? அக்குமாரக் கடவுள் பிரமாவாகிப் படைப்பர்; என் னுருவாகிக் காப்பர்; ஈசன் போல் அழிப்பர்! வேதங்களுக்கும் எட்டாதவர். இப் படைகளையெல்லாம் மிக விரைந்தழிப்பர். அவர் திருவுளங் கொண்டால், புன்முறுவலாலழிப்பர்; முனிவினாற் கொல்வர்; திருவாக்காலழிப்பர்; பார்வையாற் படுப்பர்; இஃது அவருக்கு ஒரு திருவிளையாடல் போலும்; வேற்படையால் சூரன் அழிவன். நீ பொன்னுலகம் பெறுவை. ஐயுறுதே" என்று கூறினார். இந்திராதி இமையவர்கள் விண்ணில் போரினை நோக்கி நின்றார்கள்.

பூதர்கள் அசுரருடன் பொருது புறந் தந்தார்கள். இலக்கத்தெண்மரும் ஓய்ந்தனர். வீரவாகுதேவரும் சிறிது நேரம் போராடி இளைத்து கந்தவேள் மருங்கெய்தினார். இவற்றை யுணர்ந்த குமாரக் கடவுள் சிறுநகை புரிந்து வில்லை வளைத்து கணைமழை பொழிந்தார். அவுணரில் கரமற்றார் பலர்; சிரமற்றார் பலர்; உரமற்றார் பலர்; தாளிழந்தார் பலர்; பெருமான் விடுங் கணைகளால் பூமியில் நின்ற அசுர சேனைகள் முழுதும் அழிந்தன. அதனைக் கண்டு தேவர்கள் அகமகிழ்ந்து ஆர்த்தார்கள். மற்றொரு அண்டத்தில் உள்ள சேனைகள் சினந்து வந்தன. பெருமான் நாலா பக்கங்களிலும் தேரைச் செலுத்துமாறு வாயுவுக்குப் பணித்

திருள், வாயு அவுணர் நிற்குமிடந்தோறும் அவர் பாணம் பிறபடத் தேரைச் செலுத்தினன். கந்தவேள் கணைமழையால் அண்டம் நிறைந்த அசுரர்கள் அனைவரும் அழிந்தனர். பிண மலை குவிந்தது. உதிரக் கடல் பெருகியது. மேலுமுள்ள மற் ஹொரு அண்டத்துள்ள படைகள் வர அவற்றையு மழித்து, மீண்டும் படைகள் வாராவண்ணம் அண்ட கோளகையின் வாயிலை யடைத்தார். முருகப் பெருமான் பார்வையால் பிணமலைகள் வெந்து நீறாயின. வெற்றிடமாயிற்று.

சூரன் அது கண்டு சினம் மூண்டு குமாரக் கடவுளை நோக்கி "பாலகனே! சிவபெருமானிடம் என்றும் இறவா வரம் பெற்று ளேன். மாலயனாதி வானவர் மறந்தும் என்னோடு போர் புரியார். தேவர்கள் சொல்லைக் கேட்டு என்னுடைய திறத்தை யுணராது சிறு பிள்ளைமைத் தன்மையினால் வந்தாய்; இனி நீ உய்யாய்" என்றான். முருகப் பெருமான் "பேதையே! வம்புரை செய் யாதே! நினக்கு நமது அம்பு விடை சொல்லும்" என்றார். சூரபன்மன் வில்லை நாணேற்றுதலும பூதர்கள் வந்து எதிர்த்துப் போர்புரிந்து அழிந்தனர். இலக்கத்தெண்மரும் எதிர்த்துப் போர் செய்து புறங்கொடுத்தோடினர். வீரவாகு தேவர் அவன் தேரிற் பாய்ந்து சிவபெருமான் தந்த வாளாயுதத்தால் அவ னுடைய வில்லை வெட்டினார். சூரன் கொதித்து இடியேறுபோல் அவர் மார்பில் அறைந்தான். அவர் உதிரம் பெருக வீழ்ந்து அயர்ந்தார். சூரபன்மன் தூதுவனைக் கொல்லுதல் அடாது என்று அவரை எடுத்து ஆகாயத்தில் எறிந்தான். வீரவாகு தேவர் உணர்வு பெற்று மீண்டு வந்து முருகவேள் அருகிற் சென்றனர்.

சூரபன்மன் வேறு மேருமலைபோன்ற வில்லை யெடுத்து, பாணமழை பொழிந்தான். பெருமான் அவற்றை விலக்கி வேறு பல்கோடி கணைகளைச் சொரிந்தார். இருவரும் விடுகின்ற கணை கள் மண், விண், கடல், மலை முதலிய எங்கும் உலாவின. வீர லக்ஷ்மி "இவ்விருவருள் எவரிடம் செல்வோம்" என்று ஐயுற்று நின்றனள். சூரபன்மன் சுப்ரமண்யக் கடவுளுடைய தேரிற் கட்டிய கொடியை யறுத்து வீழ்த்தி வெற்றிச் சங்கை ஊதி னன். முருகவேள் எழுபாணங்களால் சூரபன்மனுடைய கொடியை யறுத்துக் கடலில் இட்டார். அதுகண்ட பானுகம்பர் என்ற பூதப்படைத் தலைவர் மகிழ்ந்து, தம்முடைய ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் வெற்றிச் சங்குகளை வைத்து ஊதினர். விஷ்ணுவும் தனது பாஞ்சஜன்யம் என்னும் சங்கை ஊதினர்.

தேவர்கள் யாவரும் தத்தமது சங்குகளை ஊதி ஆர்த்தனர். தேவர்கள் பணித்தவாறு அக்கினிதேவன் கோழிக்கொடியாகி முருகப பெருமான் திருத்தேரின்மீது ஏறி அண்டங்கள் வெடிபடக் கூவினான. இவற்றைக் கண்ட சூரபன்மன் சினந்து, "என் முன்னே வருவதற்குப் பயந்திருந்த இத்தேவர்கட்கு இத்துணை ஆணவமா? ஆரவாரமா? முதலில் இவரைச் கொல்வேன்'' என்று தேரை வானத்திற் செலுத்தி தேவர்மேல் கோடானுகோடி பாணங்களைச் செலுத்தினான். தேவர்கள் புண்பட்டு ஓடினார்கள். கந்தக் கடவுள் தனது தேரையும் வானத்திற் செலுத்தி, தேவர்க்கு அபயஸ்தந் தந்து சூரனுடன் போர் புரிந்தனர். அவ்விருவருடைய தேர்கள் கறங்கு போலவும் குலாலன் திகிரி போலவும் சுழன்றன. பாதலத்திலும் கடல் நடுவிலும் அண்ட கடாகங்களிலும் சாரிகை வந்தன. தேவர்கள் வாடினார்கள்; யட்சர்கள் மருண்டார்கள்; நாகர்கள் அலைந்தார்கள்; மலைகள் பிளந்தன; கடல்கள் வற்றின; பூதலம் நடுங்கின; நட்சத்திரங்கள் உதிர்ந்தன; அவ்விருவருடைய தேர்கள் சுற்றுவதால் இவ்வண்ணம் பல உற்பாதங்கள் உண்டாயின.

முருகப்பெருமான் பதினான்கு கணைகளால் சூரபன்மன் தேரையழித்தார். சூரபன்மன் வில்லுடன் பூமியை யடைந்தான். நஞ்சூட்டிய பலகோடி கணைகளை முருகவேள்மேல் விடுத்தான். பெருமான் அவற்றையறுத்து ஆயிரங் கணைகளை விடுத்தார். அவைகள் அவன் புயத்திற் பட்டுத் துகளாயின. சூரபன்மன் மீண்டும் இரண்டாயிரங் கணைகளை விடுத்தான். அவைகள் பெருமான் புயத்திற் பட்டு கண்ணுதற் கடவுள் திருமுன் எரிந்த மன்மதனைப் போல் கரிந்தன. பெருமான் அவன் வில்லைத் துணித்தார். சூரபன்மன் வேறொரு வில்லை எடுத்து மாயத்தைச் செய்ய எண்ணி, விண்ணில் தோன்றினான்; பெருமான் அங்கு செல்ல, மீண்டும் மண்ணில் தோன்றினான்; பெருமான் மண்ணில் வர, கடல் நடுவில் தோன்றுவான்; மேரு மலையின் உச்சியில் தோன்றுவான்; மேகநடுவில் தோன்றுவான்; பாதலத்தில் தோன்றுவான்; வைகுண்டத்திற் றோன்றுவான். முருகவேளும் ஆங்காங்கு தொடர்ந்துபோய்ப் போர்புரிந்தார். சூரபன்மன் இந்திரஞாலத் தேரின் மீது ஏறி ஒரு கணப்பொழுதேனும் ஓரிடத்தில் நிற்காமல் சூறைக் காற்று போல சுழன்று அண்டகோளகையின் வாயிலை யடைந்தான். அங்கு அப்பாலுள்ள சேனைகளை வராவண்ணம் வாயிலை யடைத்திருப்பதைக் கண்டு நகைத்து, அத்தடைகளைத் துணித்தான். உடனே அப்பாலண்டங்களிலுள்ள அசுரசேனைகள் ஆர்த்து வந்தன. குமாரவேள் சிறுநகை செய்ய சேனைகள் சாம்பு

ஓம் குஹாய நம:

கற்பு.

வேறு துணையில்லாமையால் வெளியே யிருந்தபடியே கலங்கிய மனத்துடன் கடவுளை நினைந்த வண்ணமாக இருந்தான் பொன்னன். அவன் மனைவியாகிய சிலம்பாயி அறையிலிருந்து கொண்டு, "முருகா! முருகா! வேதனை தாங்கமுடியவில்லையே; என் செய்வேன்?" என்று வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருந்

ராயின. மற்றோரண்டத்துள்ள சேனைகள் வர ஊங்காரத்தாலழித்தார். இவ்வாறு பார்வையாலும் அழித்தார். மீண்டும் மீண்டும அண்டங்களிலுள்ள சேனைகள வந்துகொண்டேயிருக்க, அறுமுகனார் தமது திருககரத்தி லிருக்கின்ற சூலம், மழு, சக்கரம், தண்டு, கழு என்ற ஐந்து படைக்கலங்களை விட்டார். அவைகள் பற்பல உருவங்களை எடுத்து ஆயிரத்தேழு அண்டங்களிலும் சென்று சென்று அங்கதுள்ள சேனைகள எல்லாவற்றையும் அழித்துவிட்டன. சூரபன்மன் தனித்து நின்று சிவபெருமான் தந்த சக்கரப் படையை விடுத்தான். முருகப் பெருமான் அதனைக் கைநீட்டிப் பற்றினார். சூரபன்மன் மாயையால அளவிறந்த உருவங்களை எடுத்து பாணமழை பொழிந்தான். குமாரக் கடவுள் ஞானாஸ்திரத்தால் அவனுடைய மாயங்களைத் தொலைத்தார். சூரபன்மன் இந்திரஞாலத்துடன் பிருதிவி யண்டம் முழுவதும் மின் போலச் சென்று சென்று வெளிப்படுவன். முருகவேளும அவனை விடாது சென்று பொருதனர். அறுமுகக் கடவுளைக் காணாது அமரர் அஞ்சி, சூரனுடன் தனித்துச் சென்ற பெருமானை நிலை யாதோவென ஐயுற்றார்கள். திருமால்,

> ஓதியாகியு முணர்ந்தவர்க் குணர்வு மொண்ணு
> நீதியாகியு நிமலம தாகியே நிகழுஞ்
> சோதியாகியுந் தொழுதிடு மெம்மனோர்க் கெல்லாம்
> ஆதியாகியு நின்றவ னறுமுக னன்றோ.

என்று தேற்றினார். (தொடரும்)

தான். இரவு 3 மணியிருக்கு மாதலால் எங்கும் அமைதியே குடிகொண்டிருந்தது. அவர்கள் இருந்தது சந்திரபவனம் என்ற பெரும் பங்களாவில் ஒரு மூலையில் உள்ள சிறு குடிசை, அதனால் அவளுக்கு ஆறுதலைச் செய்ய ஆறுதலையானை யன்றி வேறு துணையில்லை; திடீரென்று குழந்தையின் குரல் கேட்டது. பொன்னன், “சிலம்பாயி! குழந்தை பிறந்து விட்டதா? என்ன குழந்தை? கடவுள் காப்பாற்றுவார்” என்றான். சிலம்பாயி “முருகனருளால் பெண் குழந்தை பிறந்தது” என்றாள். விடிந்தவுடனே பொன்னன், அந்தப் பங்களாவுக்கும் தனக்கும் தலைவராகிய சந்திரசேனர் என்கிற பிரபுவிடம் போய், அவர் கால் மேல் விழுந்து, “எஜமானே! உங்கள் புண்ணியத்தாலே பெண் குழந்தை பிறந்ததுங்க” என்றான். சந்திரசேனர் “பொன்னு! மெத்த சந்தோஷம்; இனி உனக்கு அதிர்ஷ்டந்தான் போ” என்றார். பொன்னனுக்கு பொன்னுலகமே கிடைத்தாப் போன்ற மகிழ்ச்சி. 9 நாள் கழிய தன் மகளுக்குக் கல்யாணி என்று பேர் சூட்டினான். குழந்தை பிறந்த பிறகு பொன்னன் அந்தப் பங்களாவின் செடிகொடிகளுக்குத் தண்ணீர் விடும் வேலையை மிக விரைவாகச் செய்து விட்டுத் தன் மகளுடன் கொஞ்சி மகிழ்வான். 3 மாதங்கள் கழிந்தன. திடீரென்று உண்ட வெப்பு நோயால் பொன்னன் மனைவி சிலம்பாயி வாழ்நாள் முடிவு பெற்று விட்டது. பொன்னன் துன்பக் கடலில் விழுந்து தத்தளித்தான். தாயில்லாக் குழந்தையை மிகுந்த பரிவுடன் காப்பாற்றி வந்தான்.

சந்திர பவனம் என்ற அம்மாளிகைக் குரியவராகிய சந்திரசேனருக்கு அப்போது ஐந்துவயதுடைய ஓர் மகன் இருந்தான். அவன் பெயர் மயில்வாகனன். அதற்குப் பிறகு சந்திரசேனருக்கு ஒரு பெண்மகவும் பிறந்தது. அதற்கு நீலாம்பிகை என்று பேரிட்டனர். பொன்னன் அடிக்கடி தன் மகளின் திறத்தைத் தன் எஜமானிடம் கூறி மகிழ்வான். அவனுடைய, வாழ்நாள், மகிழ்ச்சி, செல்வம் அத்தனையும் கல்யாணியிடம் அடங்கி யிருந்தன. கல்யாணிக்கு வயது மூன்றாயிற்று. அவள்

பாற்கடலில் தோன்றிய பங்கய மடந்தை போல் இயற்கை யழகில் இணையற்று விளங்கினாள். கல்யாணியும் நீலாம்பிகையும் ஒன்று கூடி விளையாடுவார்கள். கல்யாணிக்கு நீலாம்பிகையுடன் விளையாடுவதில் பரம சந்தோஷம். ஆனால், நீலாம்பிகையின் தாய்க்கு ஏழையின் மகளுடன் தனது செல்வக்குமாரி உறவாடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. கல்யாணியை ஒருநாள் "தரித்திரபே; போ; கண்ணைப் பிடுங்கிக் காக்கைக்குப் போடுவேன்" என்று கடிந்தாள். கல்யாணி அழுது கொண்டே தோட்டத்து வேலை செய்யும் தன் தந்தையிடம் போய் அவன் காலைக் கட்டிக் கொண்டு, "அப்பா! நீலாவின் அம்மா என்னைப் போ என்கின்றார்களே! இது நம்முடைய வீடுதானே? நீதானே அவர்களுக்கு எல்லாம் வாங்கித் தருகின்றாய். என் கண்ணைப் பிடுங்கிக் காக்கைக்குப் போடுவேன் என்கிறார்களே? அவர்களுக்கு இனி ஒன்றும் வாங்கித் தராதே" என்று தேம்பித் தேம்பிச் சொன்னாள். பொன்னன் மகளுடைய கண்ணீரைத் துடைத்து "அம்மா! அழாதே, இது நம்மவீடன்று; நாம் வேலைக்காரர்கள், அவர்கள் நமது எஜமானி. நீ அங்கே போகாதே. அவர்கள் தருகின்ற பணத்திற்கு நான் போய் கடையில் பண்டங்களை வாங்கித் தருகின்றேன். நீயும் நானும் சாப்பிடுவது அவர்கள் சாப்பாடு; நீ இனி அடிக்கடி அங்கே போகாதே" என்று சமாதானஞ் செய்தான்.

கல்யாணி தன் குடிசைக்கு முன் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தாள். மயில்வாகனன் பள்ளியிலிருந்து வந்தவன் அவள் பாடுபட்டுக்கட்டும் அவ்வீட்டைக் காலால் அழித்துவிட்டான். கல்யாணிக்கு மயில்வாகனன்மேல் மிகுந்த கோபம்பிறந்துவிட்டது. "எங்கள் அப்பாவிடம் சொல்லிவிடுவேன்" என்றாள். மயில்வாகனன் அவளுடைய பொம்மையை எடுத்துக் கிணற்றில் போட்டுவிட்டு ஓடிவிட்டான். கல்யாணி அழுதுகொண்டே பிதாவிடம்போய் தன் குறைகளை முறையிட்டாள். அவன் மகளுக்கு வேறு பொம்மையை வாங்கிக் கொடுத்து ஒருவாறு அவளை ஆறுதல் செய்தான். பொன்னன் கல்யாணியைப் பள்ளியில் விடுத்துப்

படிக்கவைத்தான். கல்யாணி நன்றாகப் படித்துத் தேறினாள். நீலாம்பிகைக்குப் படிப்பென்றால்வேம்பு. தினந்தோறும்பள்ளிக்குப் போகும்போதெல்லாம் அழுவாள். கல்யாணிக்குவயது 14 ஆயிற்று. மின்னற்கொடிபோல் விளங்கினாள். ஒருநாள் பூங்கோட்டத்தில் அமர்ந்து சந்தர்வகானம்போல் பாடிக்கொண்டிருந்தாள். மயில் வாகனன் திடீரென்று அங்குவந்தான். அவனை அவள்பார்க்க வில்லை. அவளுடைய பாடல், இனிய குரல், முகப் பொலிவு, அமைதி, சாயல் இத்தனையும் சேர்ந்து அவனைப் பரவசப்படுத்தி விட்டன. மயில்வாகனன் அவளை முதலில் விண்ணுலகினின்றும் வந்த அமரமடந்தை என்று ஐயுற்றான். பிறகு கல்யாணியென் பதை யுணர்ந்தான். பின்புறத்தேபோய் அவள் கண்களை மூடி னான். அவள்நடுங்கி அவன்கையைவிலக்கிப்பார்த்தாள் நாணினாள். மயில்வாகனன் "கல்யாணி! நின் பாட்டைக் கேட்க செவி ஆயிரம் வேண்டும்" என்றான். அவள் சிறிது தலைநிமிர்ந்து அவன் வடி வழகைக் கண்டு உள்ளத்தில் உவகையுற்றாளெனினும், அதைக் காட்டிக்கொள்ளாமல் "தங்கள் போன்றவர்கட்கு இது தக்க தன்று; கன்னிகையாயுள்ள என்னை நீர் தீண்டலாமா?" என் றாள். மயில்வாகனன் "கல்யாணி! நீ என் மனத்திற் குடி புகுந்து விட்டாய். ஆதலால், நான் உன்னை நேசிக்கின்றேன். நீ என்னை....." என்று நிறுத்தினான். கல்யாணி, "நான் வேலைக் காரன் மகள்; நீங்கள் கோடீஸ்வரருடைய புதல்வர். என்னை நீர் விரும்புவது எவ்வாறு பொருந்தும்?" என்றாள். மயில்வாக னன "கல்யாணி! அன்புக்கு ஜாதியில்லை; தகுதியில்லை; அன்பு உலகில் எல்லோரும் சமம்தான். உன்னைத் தவிர வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்ள மாட்டேன். என்று சொல்லிக் கொண்டிருக்கின்றபோதே அவன் தாய் அங்கு வந்துவிட் டாள். கல்யாணி ஒருவாறு ஒதுங்கிப் போய் விட்டாள். மயில் வாகனன் தாய்க்கு மகத்தான கோபம்பிறந்துவிட்டது. "ஏண்டா! மாயக்கள்ளி உன்னை மயக்கி விட்டாளா? வேலைக்காரன் மக ளுடன் உனக்கென்ன பேச்சு? அவளை சரியாக வைத்துப் பேச லாமா?" என்று சீறினாள். மயில்வாகனன் "அம்மா! அப்படிச்

சொல்லாதீர். குணந்தான் பெரிது. அவள் பரிசுத்தமான உள்ளம் உடையவள். அவளை வீணே வையாதே" என்று கூறினான்.

நாட்கள் சில கழிந்தன. மயில்வாகனன் கல்யாணியையே உள்ளத்தில் எழுதி அவளை மணந்து கொள்ள உறுதி செய்து கொண்டான். தன் கருத்தை நண்பர்கள் மூலம் பிதாவுக்குத் தெரிவித்தான். அவர் முதலில் இணங்கவில்லை. பிறகு தன் ஒரு மகனுடைய அன்பைக் கெடுக்க மனம் இன்றி மகன் எண்ணத்தை நிறைவேற்றி வைத்தார். கல்யாணிக்கு இப்போது அந்தப் பங்களா சொந்தமாகி விட்டது. பொன்னன் தன் மகளுக்கு ஏற்பட்ட பாக்கியத்தை நினைந்து உடல் பூரித்தான். மயில்வாகனன் தன் மனைவியுடன் இனிது வாழ்வாரம்பினான். கல்யாணி தன் கணவனைக் கடவுளாகக் கருதி கற்பு நெறி தவறாமல், மாமியை நாள்தோறும் வணங்கி, மாமனுக்கு வேண்டிய ஏவலைப் புரிந்து, சகல குணங்களுக்கும் உறைவிடமாக இருந்தாள். மயில்வாகனன் தாய்க்கு அவளைக் கண்டால் ஒரே எரிச்சல். தன் ஜபம் பலிக்காதென்று தெரிந்தாள். எப்படியும் இவளைத் தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணினாள். கல்யாணி மாமியைக் காணுந்தோறும் கனிரசம்போல் இனிய உரைபகர்ந்து மிகுந்த பணிவுடன் வேண்டிய குற்றேவலைச் செய்வாள். ஆனாலும் அவளுக்கு அது பயன்படவில்லை. "தோட்டக்காரன் மகளுக்கு இந்த வாழ்வா? இவளுக்குக் கட்டிலா? இவளுக்கு என்ன வாழ்வு? இவள் தொலைந்தால்தான் நமது மகளுக்கும் கல்யாணம் ஆகும். தரித்திரம் பிடித்த இவள் இருக்கும் வரை மகளுக்குக் கல்யாணம் ஆகாது" என்று பொருமுவாள்.

கொடுமனமுடைய அவள் சிங்கி என்னும் பாஷாணத்தைப் பாலுடன் கலந்து கல்யாணி படுக்கும் வீட்டில் வந்து, "அம்மா! இந்தா; ஏன் நீ பால் குடிக்கவில்லை" என்று அவளிடம் கொடுத்து விட்டு, "இத்துடன் உன் ஆயுள் முடிவடைக" என்று எண்ணி தன் இருக்கை சேர்ந்தாள். கல்யாணி தன் மாமி தன்மேல் மிகுந்த அன்பு பாராட்டி பால் கொண்டுவந்து கொடுத்ததற்கு

உவந்து இனி தனக்கு நற்காலமே என்று எண்ணி, அந்தப் பாலை பக்கத்தில் வைத்து விட்டு, சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்து விட்டு அயர்ந்து நித்திரை செய்து விட்டாள். நீலாம்பிகை விளக்கைச் சுருக்காமலும் புத்தகத்தை மூடாமலும் அண்ணி தூங்குவதைக் கண்டு, மனதில் "இவளுக்கு வந்த வாழ்வே வாழ்வு; இவளுக்கு போங்காலம் என்று வருமோ?" என்று வைது கொண்டு வந்து அவள் தலைமாட்டில் தமளரில் பால் இருக்கப் பார்த்தாள். "இவளுடைய திமிர் பால் குடிக்கக்கூட சோம்பல்; தோட்டக்காரன் மகளுக்குப் பால் ஒரு கேடா?" என்று எண்ணி பாலை எடுத்துத் தான் குடித்து விட்டாள். தன் அறையிற் போய் படுத்தாள் விடிந்தது. எல்லோரும் எழுந்தார்கள். நீலாம்பிகை மட்டும் எழுந்திருக்கவில்லை. அவள் தாய் போய் எழுப்பினாள். அவள் பிணமாயிருக்கக் கண்டாள். அலறினாள். தான் கொடுத்த பால் தமளர் தலைமாட்டில் இருக்கப் பார்த்தாள். நடந்ததை யுணர்ந்தாள். "அந்தோ! கற்பின் மிக்க என் மருமகளுக்குச் செய்த தீவினை என்னையே வந்து சார்ந்தது; நான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது. கற்புடையவர்கட்கு ஒரு தீங்கும் நேராது என்பது இதனால் விளங்கி விட்டது" என்று புலம்பினாள். அன்று தொடங்கி தனக்கு மகளும் மருமகளும் கல்யாணியே என்று எண்ணி அன்பு பாராட்டி வாளாயினாள். கல்யாணி சிறந்த கற்பொழுக்கத்துடன் மனையறத்தை நடாத்திப் பொன்றாப் புகழைப் பெற்றனள்.

ஓம் குஹாய நம :

குருபக்தி

(48-வது பக்கத்தொடர்ச்சி)

பெரியோர்கள் மறந்தும் விளையாட்டிற்கும் பொய்மொழி கூறமாட்டார்களே? நமது குருமூர்த்தியை வினவியுணர்வோம்" என்று பற்பல எண்ணிக் கொண்டே அத்தினபுரம் வந்தான். துரோணரைத் தனியிடத்தில் வணங்கினன். "குருநாத! தாங்கள் என்னைத் தழுவி நீயே என் அன்புக்குரிய சீடன்; உன்னிலும் இனியார் எனக்கில்லை என்று கூறினீர். இப்போது ஏகலவ்யன் என்ற வேடராஜ புதல்வன் என்னிலும் உமக்குச் சிறந்த சீடனாக விளங்குகின்றானே? காலையில் "உனக்கு மட்டுமே இதனைத் தெரிவித்தேன்" என்று தாங்கள் கற்பித்த அரிய வித்தையை அவனுக்கு கற்பித்திருக்கின்றீரே? அதனை எனனிடம் ஏன் மறைத்துக் கூறினீர். குருநாத! இதனை அடியேனுக்குச் சொல்லக் கூடுமானால் சொல்லும்" என்று கேட்டான். அதனைக் கேட்ட துரோணர் ஆச்சரியமுற்றார். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். "அருச்சுனா! அந்த ஏகலவ்யனை எனக்குக் காட்டு" என்று அவனுடன் புறப்பட்டு கானகத்திற்கு வந்தார். ஏகலவ்யன் இருக்கையை யண்மினர். கருத்த மேனியும் மரவுரியும் அழுக்குற்ற சடையும் உடைய அந்த குரு புத்திரனாகிய ஏகலவ்யன் தன் குருநாதரை நேரிற் கண்டவுடனே ஓடினான்; ஆடினான்; அளவற்ற ஆனந்தங் கொண்டான்; அடியற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்தான்; அன்புக் கடலில் ஆழ்ந்தான்; துதித்தான்; "குருநாதா! குருநாதா!" என்று கூவினான்; அவர் திருவடியை விதிப்படி பூசித்தான். பித்தனைப்போல் ஆயினான். அவனுடைய குரு பக்தியைக் கண்ட துரோணர் வியப்புற்றார். "அப்பா! நினக்குக் குரு யார்?" என்று வினவினர். ஏகலவ்யன், தாங்களே அடியேனுக்குக் குரு; இதோ இந்தத் திருவுருவத்தைத் தாங்களாகப் பாவித்துத்

தங்கள் திருவருளால் வில் வித்தையைப் பயில்கின்றேன்" என்றான். துரோணர் "மாசற்றவனே! இந்த ஏழு பிரிவாகப் பிரியும் வித்தையை எங்கு கற்றாய்?" என்றார். ஏகலவ்யன் "குருநாத! அதனையும் காலையில் எனக்கு நீரே உள்ளத்தினின்றும் விளக்கினீர்" என்றான். துரோணர் அவன் குருபக்தியினால் தானே கற்கும் தன்மையை யுணர்ந்து அதியற்புதமுற்று, அவன் குருபக்தியை வெளிப்படுத்த எண்ணி, "அப்பா! என் மாணவனாகிய நீ எனக்கு குருதட்சிணை கொடு" என்றார். ஏகலவ்யன் "குருநாத! குருதட்சிணையாக அடியேன் எதனைக் கொடுக்க வேண்டும்?" என்றான். துரோணர், "மைந்த! நின் வலக்கைப் பெருவிரலைக் கொடு" என்றார். வில்வித்தைக்குச் சிறந்த அங்கமாகிய பெருவிரலைக் கொடு என்று துரோணர் கூறிய சொல்லைக்கேட்ட ஏகலவ்யன், சிறிதுகூட யோசிக்காமலும், மனம் மாறுபடாமலும், முகத்திலும் அகத்திலும் வேற்றுமை யடையாமலும் தனது வலக்கைப் பெருவிரலை வெட்டினான்; தட்டில் வைத்துக் குருநாதர் திருவடியில் சமர்ப்பித்து வணங்கினான். அவனுடைய குருபக்தியைக் கண்டு 'ஆ! ஆ!' என்று வானவரும் வியந்து வாழ்த்தினார்கள். அருச்சுனன் மிகப்பெரிய அந்த செயலைக் கண்டு அவனுடைய குருபக்தியை வியந்து போற்றினான். துரோணர் அவனை வாழ்த்திவிட்டு அருச்சுனனுடன், அத்தினபுரஞ் சேர்ந்தார். ஏகலவ்யன், மீளவும் குருபக்தியின் மகிமையால் மற்றை விரல்களால் வில் பயிற்சியில் தேர்ந்து சிறப்புற்றான். குருபக்திக்கு அவன் ஒரு சிறந்த உதாரண புருடனாக விளங்குவானாயினான்.

'மின்னே'யிலுள்ள 'ஏ' அசை; "விரும்பியா" னென்று இறந்த காலத்தால் கூறப்படுதலினாலே ஆசிரியர் தம்மேல்வைத்து இச்செய்யுளிற் கூறவந்த அடியாருடைய மனநிலையானது தாம் பொய்யுலக வாழ்வின் அநுபவப் பயனாக, பொய்யுலக இன்பம், நிலையான இன்ப அமைதி யைக் கொடாதென்றும், இன்ப அமைதியைப் பெறுவதற்கு முருகனுடைய திருவடியில் பற்றுவைத்தல் வேண்டுமென் றும் அறிந்த மனநிலையாகும். அங்ஙனம் அவர் அறிவுடை யவராயினும் அறிந்தபடி உலகப்பற்றை விட்டு முருக னுடைய திருவடியிற் பற்றுவைக்குஞ் செயல் கைகூடப் பெறாதவராயிருத்தலாலும் அச்செயல் நிகழ்ந்தாலன்றி, முருகனுடைய திருவடியின்ப உணர்வு அவர் உள்ளத்தில் விளங்கத் தொடங்காதாதலின் அவர் மனநிலைக்கு ஒத்தபடி 'விதியின்பயனிங்கிதுவோ' என்று ஆசிரியர் கூறினார். விதி என்பது இங்கே வினைமலம். அது உலக வாழ்வை நிலை யென நினைந்து வாழ்ந்ததினாலுண்டாகும் வினைப்பயன். அவ்வினைப் பயனாலே உண்டாகும் உலக இன்பத்தை வெறுத்து முருகன் திருவடியநுபூதியை அவாவும் அடி யவர் மனநிலையை ஆசிரியர் இங்கு விதியின் பயனிங் கிதுவோ என்று கூறினார். இது என்பது அறிசுட்டுப் பெயராய் உலக இன்பத்தைக் குறிக்கிறது. 'ஓ' இழிவு சிறப்புப் பொருளில் வந்தது. விதியின் பயன் என்பதற்குப் பின் பெறுவது என்ற சொல் அவாய் நிலையாய்த் தொக்கி நின்றது. 'என்னே' என்பதிலுள்ள 'ஏ' அசை 'என்' என்பது வினாப்பொருளைத் தரும் 'எவன்' என்னும் அஃறிணை இருபால் குறிப்பு வினை முற்றுச் சொல்லின் மரூஉ; எப்படி என்பது அதன் பொருள். அதாவது நான்

முருகன் திருவடி யனுபூதியை அடைவது எப்படி? நிலையில்லாத உலக வாழ்வில் பற்றுவைத்து ஒழுகின ஒருவரது வினைமலமானது அவர் முருகனது திருவடியில் மெய்யன்பு செய்து வணங்குதலாற் கெடுமென்பது இச்செய்யுளின் கருத்து.

—*!!*—

(28) ஆறு வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.

(ப---ரை.)

அயில்வேலரசே	— உயிர்களுடைய பொதுநிலையியல்பில் அவைகளுடைய மல இருளைக் கெடுக்கின்ற ஒளியாகிய வேற்படை யுடைய தலைவனே.
ஞானாகரனே	— மெய்யறிவுக்கு உறைவிடமாயுள்ளவனே.
ஆறுவமுதே	— உயிர்களை விட்டு நீங்காத இன்பமே.
யானாகிய என்னை	— தனக்கு வேறாயுள்ள உயிராகிய என்னை.
விழுங்கி	— எனது ஜீவபோதத்தை வியாபகமான தனது பரபோதத்தி லடக்கி

வெறுந்தானாய் நிலைநின்ற — நானெனத் தானென வேற்றுமை யில்லாது தானென ஒன்றேயாய் என்றும் நிலை பெற்று நிற்கிற.

அது தற்பரமே — மகாவாக்கியப் பொருளாகிய அதுவென்னும் எனக்கு மேலான பொருளாகிய முருகனது அனுபூதியை.

நவிலத் தகுமோ — நான் என்னுள்ளே உணர்வதல்லாமல் பிறருக்கு அதனை நாவினாற் சொல்ல முடியுமா? முடியாதென்றபடி.

(வி---ரை.)

அயில்வேலரசு என்பது முருகனுடைய சிறப்பு இயல்பு நிலையில், சத்துத் தன்மையையும், ஞானகரன் என்பது, சித்துத்தன்மையையும், ஆன அமுது என்பது ஆனந்தத் தன்மையையும் குறிக்கின்றன. பின், 3, 4 வரிகளில் ஆசிரியர்தாம் அடைந்ததாகக் கூறுகிற, அத்துவித அனுபூதியானது முருகனுடைய சத்துத் தன்மையைச் சார்ந்து சத்தாயும், சித்துத் தன்மையால் அறிவிக்கப்பட்டு சித்தாயும், ஆனந்தத் தன்மையின்கண் விளங்கப் பெறும் ஆனந்தமாயும், இவ்வாறு சச்சிதானந்தத் தன்மையடைதல் பற்றி உண்டாதலால் அவனை அயில்வேலரசே என்றும், ஞானகரனே என்றும், ஆன அமுதே என்றும், விளித்துக் கூறினார்.

உயிர் முருகனுடைய சத்துத் தன்மையைச் சார்ந்து தன் பொது இயல்பு நிலையில் துவந்துவங்களாகிய சத்தும்

(மெய்) அசத்தும் (பொய்) நீங்கி தன் சிறப்பு இயல்பு நிலையில் சத்துத் தன்மையை யடைகிறது. உயிர் முருகனுடைய சித்துத் தன்மையால் அறிவிக்கப்பட்டு துவந்துவங்களாகிய தன் பொது இயல்பு நிலையில் சித்தும், (அறிவு) அசித்தும், (அறியாமை) நீங்கி தன் சிறப்பு இயல்பு நிலையில் சித்துத் தன்மையை யடைகிறது. உயிர் முருகனுடைய ஆனந்தத் தன்மையின் கண் (இன்பம்) விளங்கப் பெற்று பொது இயல்பு நிலையில் துவந்துவங்களாகிய இன்பமும் துன்பமும் நீங்கி, தன் சிறப்பு இயல்பு நிலையில் ஆனந்தத்தை யடைகிறது. இங்ஙனம் உயிர் தன் மூவகைப் பொது இயல்பு நிலைகளிலிருந்து நீங்கி, மூவகைச் சிறப்பு இயல்பு நிலைகளை யடைந்து, முருகனநுபூதி யடைதற்கு முருகனுடைய சிறப்பு இயல்பு நிலையில் சச்சிதானந்தமே (மெய்யறிவு இன்பம் நிலைக்களமாயிருக்கிறதென அறிக.

முருகனருள் உலக வாழ்வுக்குரிய பொது இயல்பு நிலையில் ஏகதேசமாய் விளங்க வில்லையானால் உலகில் சத்தாகிய மெய்யும், சித்தாகிய அறிவும், ஆனந்தமாகிய இன்பமும், மக்களுக்கு ஏகதேசமாய் விளங்காமற் போய் விடும்.

அயில்வேல்—வினைத்தொகை.

அயிலல் - உண்ணல்; அதாவது மக்களுடைய பொது இயல்பு நிலையில் அவர்களுடைய மல இருளைக் கெடுத்தல். தலைவனாகிய முருகன் தனது அருள் ஒளிமயமாயிருக்கிற வேலால் மக்களுடைய பொது இயல்பு நிலையில், அவர்களுடைய உள்ளத்திலுள்ள மல இருளைக் கெடுத்து, அருள்

ஒளியை விளக்கி; தன்னை யடையும் பருவம் நண்ணும்படி செய்தலால் அயில்வேலரசே என்றார். மக்கள் தங்கள் உள்ளத்தில், இந்த அருள் ஒளியால் மல இருள் நீங்கப் பெற்று, ஒளிவிளக்க மடைதலால், அயில்வேலரசே என்பது முருகனுடைய சத்துத் தன்மையைக் குறிக்கிறது என்பது கூறப்பட்டது. இது பற்றி ஆசிரியர் இந்நூல் 48-வது பாட்டில் "செறிவொன்றற வந்திருளே சிதைய, வெறி வென்றவரோடுறும் வேலவனே" என்று கூறியருளினார்.

ஞான — ஆகரன் — ஞானகரன்; வடமொழி தீர்க்க சந்தி, மெஞ்ஞானத்துக்கு உறைவிடமா யுள்ளவன்.

ஆனுவமுதே—அமுதென்பது இங்கே என்றும் நிலையா யுள்ள இன்பமாகிய பேரின்பத்தைக் குறிக்கிறது. இன்ப உருவினனாகிய முருகன் உயிர்களுக்கு இன்ப நல மளிக்கும்படி அவைகளை விட்டு எப்பொழுதும் பிரியாதிருக்தலால் ஆனு அமுதே என்றார்.

யானாகிய என்னை என்பதினால் ஆசிரியர்தான் முருகனுக்கு வேறாகிய அறிவுப் பொருள் என்று தம்மைக் கூறினார். யானென்னும் தன்மைப் பெயர்ச் சொல்லோடு இரண்டாம் வேற்றுமை ஐஉருபு சேர்ந்தால் 'என்னை' ஆகும் என்ற இலக்கண 'விதி' யிருந்தும், யானாகிய என்னை என்று ஆசிரியர் யான் என்பதையுஞ் சேர்த்துக் கூறியது, பரமான்மாவன்றி ஜீவான்மா என்னும் தனிப்பொருள் உண்மையில் இல்லை என்று மாயாவாதிகளும், ஏகான்ம வாதிகளுங் கூறும் மயக்க அறிவுக்குழியில் இதனை ஓதுகிறவர்கள் வீழாமற் பொருட்டாகும். விழுங்குதல் என்பது உருவகமாய் ஜீவபோதத்தை இல்லை எனும்படி

செய்து சிவபோதத்தி லடங்கும்படி வியாபித்தலைக் குறிக்கிறது. வெறுமை—இல்லாமை அதாவது ஜீவபோதம் முற்றும் இல்லாமை, நிலை நின்றது—நிலை நிற்கிறது என்று கூறற்பாலது. முத்தியின் என்று மீளா இயல்பு பற்றி நிலை நின்றது என இறந்த காலத்தாற் கூறினர். ஜீவபோதம் இறந்த முருகனோடிரண்டறக் கலந்து அனுபூதி யடைந்த பின் அந்நிலையை விட்டுத் திரும்புவதில்லை என்பது கருத்து. திருவள்ளுவனார் இந்த முத்தி நிலையை பேரா இயற்கை நிலையென்று கூறினர். (37-வது அதிகாரம் 10-வது குறள்) நிலைநின்ற அது என்பது, நிலைநின்றது என. அகரம் விகாரத்தால் தொக்கது.

அது என்பது தத்துவம் அஸி எனும் அத்துவித நிலை கூறும். மகா வாக்கியத்தில் தத் என்னும் பிரமப் பொருளைக் குறிக்கிறது. அது பிரமத்தின் வேறல்லாத முருகனைக் குறிக்கிறது. தத் என்னும் வடமொழிச்சொல் இங்கே அது எனத் தமிழ் மொழியில் வந்தது. தத்துவம் அஸி (அது நீ ஆகிறாய்) என்பது. குரு சீடனைப் பார்த்துச் சொல்லும் அத்துவிதநிலை கூறும் மகாவாக்கியம். சீடன் குருவைப் பார்த்துச் சொல்வது அஹம்பிரஹ்மா அஸ்மி (நான் பிரம்மம் ஆகிறேன்) என்னும் மகா வாக்கியம். இங்கே அஹத்துக்குப் பதிலாக நானென்றும், பிரமத்துக்குப் பதிலாக அது வென்றும், அஸ்மி என்பதற்குப் பதிலாக ஆய் என்றும் தமிழிலே கூறப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கியம் நானே பிரமமாயிருக்கிறேன். என்ற தப்பிதமான பொருளில் வேதாந்திகள் என்று தங்களைக் கூறுகிற ஏகான்மவாதிகளால் வழங்கப் பட்டு வருகிறது.

இவர்களைப் பற்றித் தாயுமான அடிகள் "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்" என்று 131-வது பாட்டில் கூறி யருளினார்.

அது தற்பரமே என்பது அதுவாகிய தற்பரம். தற்பரமென்பது தன்—பரம் என்ற இரண்டு சொற்களாலாகியது. தனக்கு அதாவது ஆன்மாவுக்கு மேலான பொருளாகிய முருகன் என்பதை உணர்த்துகிறது. தற்பரமென்பது இங்கே ஆசிரியர் முருகனோடு அத்துவிதமாய்க் கலத்தலால் உண்டாகும் அனுபூதியை (பேரின்பத்தை)க் குறிக்கிறது. தற்பரமே என்பதிலுள்ள 'ஏ' அசை தற்பரத்தை என இரண்டாம் வேற்றுமை உருபு விரித்துரைக்க ஆசிரியர் ஒன்றுதல் என்று பொருள்படும் அனுபூதி என்று சொல்லாமல், ஜீவான்மாவுக்கு மேலாகிய பரமான்மா என்று பொருள்படும். தற்பரம் என்ற சொல்லை இங்கே வழங்கியது முத்திநிலையில் அடிமையாகிய ஜீவான்மா மலத்தன்மை நீங்கி ஜீவபோதம் கெட்டு, ஆண்டானாகிய பரமான் மாவில் வியாப்பியமாய் அடங்குதலே யன்றி, ஜீவான்மா கெட்டு பரமான்மாவோடு ஒன்றுதலில்லை என்பதுதான் அத்துவித மகாவாக்கியப் பொருள் என்ற சித்தாந்த உண்மையைத் தெளிவாக விளக்குதற் பொருட்டாகும். மெய்கண்டதேவர் இந்த சித்தாந்த உண்மையை "நசித்தொன்றின் உள்ள நசித்தலால் ஒன்றும், நசித்திலதேல் ஒன்றுவதில்லை நசித்து மலம், அப்பணைந்த உப்பின் உளமணைந்து சேடமாங், கப்பின்றாமீசன் கழல்" என்று சிவஞானபோதம் 11-வது சூத்திர வெண்பாவிற் கூறியருளினார்.

"தொம்பதந் தற்பதம் தோன்று மசிபதம், நம்பிய சீவன் பரன் சிவனாய் நிற்கும், அம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ் செம்பொரு ளாண்டருள் சீர்நந்திதானே" என்று திருமந்திரம் 2441-வது பாட்டில் திருமூலர் கூறியருளினார்.

அநுபூதியை யடைந்த ஒருவர் அதனைப் பிறருக்குச் சொல்ல முடியாதென்பதை ஆசிரியர் தாமே 43-வது பாட்டில் பேசா அநுபூதி பிறந்ததுவே, என்றும் கூறியருளினார், இந்த அநுபூதி நிலையைப் பற்றி திருவியலூர் உய்யவந்த தேவர் திரு உந்தியார் 4-வது பாட்டில்,

"எங்ஙனிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன் அங்ஙனிருந்ததென் றுந்தீபற, அறியு மறிவதென் றுந்தீபற, என்று கூறியருளினார். இச் செய்யுளில் ஆசிரியர் தாம், இந்நூற் பெயராற் குறிக்கப்படுகிற, கந்தரநுபூதியை அடைந்ததாகக் கூறியருளினார்.

(29) இல்லை யெனுமாயையி லிட்டனை நீ
பொல்லே னறியாமை பொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

உ

ஓம் குஹாய நம:

ஆறு படைவீட்டுப் படம்.

ஒவ்வொருவரும் வழிபடற் குரியது.

மிகவும் சீரியமுறையில் எழுதப்பட்டு அச்சிடப் பட்டுளது.
விலை. 0—4—0
நமது ஏஜண்டுகளிடம் கிடைக்கும்,
மானேஜர், திருப்புகழமிர்தம் ஆபீஸ், சென்?

உ

ஓம் குஹேசாய நம:

திருப்புகழமிர்தம்

சந்தா விவரம்

[விஷு ஸ்ரீ முதற்கொண்டு]

இந்தியா, சிலோன்	ரூ 1- 4- 0
பர்மா	ரூ 1-12- 0
மலேயா, அயல் நாடுகள்	ரூ 2- 4- 0

ஈஸ்வர, வெகுதானிய, பிரமாதி விக்கிரம மலர்கள்
(தனித் தனியே காலிகோபைண்டு செய்தது)
பிரதி 1க்கு ரூ 1-8-0 (தபாற்கூலி ரூ. 0-4-0.
ரிஜிட்ரேஷன் செலவு ரூ. 0-3-0 வேறு.)
தாது ஸ்ரீ மலர் அச்சில்.

திரு. சே. எஸ். வடிவேல்
ஜமீந்தார் ஆபீஸ், காட்டுப் புத்தூர்.
காட்டுப் புத்தூர் நகரவாசிகள் ஷை அன்பரிடம் நமது பத்திரிகைக்கு சந்தாவைச் செலுத்தி, ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

108 சிவஸ்தல புராணங்களில் திரட்டிய முருகர் தோத்திரப் பாக்கள். ஆறுமுகன் அருள் விளையாடல் விலை அணா 0-4-0

மெய்யன்பரின் பிரிவு.

உத்தம குணங்களுக்கு உறைவிடமானவரும், தருமகுண சீலரும், அடியார்களை உபசரிப்பதில் வல்லுநரும் ஆகிய எனது அன்பர் திலகர் பொள்ளாச்சி ஸ்ரீ முத்துராமசாமி செட்டியார் அவர்கள் குகனடியிற் கலந்ததற்கு வருந்துகின்றேம். அவருடைய ஆன்மா சாந்தியடைக. அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுகின்றேம். பத்திராதிபர்.

தந்திவிலாசம் "செமந்தகா", திருச்சி.



கிருஷ்ணபரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச்செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலகமக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப்படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப்போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடுசைஸ்வைரம்.	பேரிசைஸ்வைரம்
1-க்கு 0—8—0	1-க்கு 0—6—0

கிடைக்குமிடம் :---

மோதிரங்கய்ய செட்டியார் சன்ஸ்

நகைவியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்.

ஏஜண்டுகள் தேவை.

Printed by M. Madhusoodana Sivam at the THIRUPPUGAZH AMIRTHAM PRESS, 108 Swami Naicken Street, Chintadripeta, Madras: Edited & Published by Guhasri KRIPANANDAVARI at the above address.